இலங்கையில் கம்பராமாயண அருஞ்சொல்லகராதி உருவாக்கத்தில் அன்பில் சே. சுந்தரராஜனின் பங்களிப்பு

கி. பிருதிவிராஜ்[1] & முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன்[2]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர்

[2]பேராசிரியர் (ம) துறைத்தலைவர்
அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.10

prithiraj249@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் கம்பராமாயண அகராதி உருவாக்கத்தின் வரலாற்றையும் அதற்கான பங்களிப்புகளையும் ஆராய்கிறது. குறிப்பாக, அன்பில் சே. சுந்தரராஜன் அவர்கள் தொகுத்த “கம்பராமாயண அருஞ்சொல்லகராதி” மற்றும் “கம்பர் கவிதைக் கோவை” போன்ற முக்கிய நூல்கள், கம்பராமாயணத்தின் சொற்பொருள், உவமை, மற்றும் கதைப்போக்கை விளக்கும் வகையில் அமைந்தமை இங்கு விளக்கப்படுகிறது. சுந்தரராஜனின் தொகுத்த கம்பராமாயண அருஞ்சொல்லகராதி, கம்பராமாயணத்திலுள்ள் பத்தாயிரத்திற்கும் மேலான பாடல்களில் இடம்பெறும் 25,000க்கும் மேற்பட்ட அரும்பதங்களுக்கு விளக்கங்களை வழங்கி, இலங்கைத் தமிழறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவிடும் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கிறது. மேலும், அவருடைய தெரிவுசெய்யப்பட்ட கம்பராமாயணக் கவிதைகளின் தொகுப்புகள் மற்றும் இராம காதையின் சுருக்க நூல்கள், கம்பரின் கவித்துவ நயம் மற்றும் இலக்கிய ஆழத்தை பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் எளிய முறையில் கொண்டு சென்றுள்ளன. இவ்வாய்வு, கம்பராமாயண ரசனையை ஈழத் தமிழ் சூழலில் பரப்பிய ஒரு வரலாற்றுச் செயலாக அன்பில்.சே சுந்தரராஜனின் பங்களிப்பை நிறுவுகிறது.

ஆய்வு நோக்கம்

- இலங்கையில் கம்பராமாயண அகராதி உருவாக்க வரலாற்றைச் சுட்டிக்காட்டுதல்.

- அன்பில் சே. சுந்தரராஜனின் “கம்பராமாயண அருஞ்சொல்லகராதி” மற்றும் “கம்பர் கவிதைக் கோவை” ஆகிய நூல்களின் இலக்கிய மற்றும் கல்வியியல் பங்களிப்புகளை ஆய்வு செய்தல்.
- கம்பராமாயணத்தின் சொற்பொருள் விளக்கம், உவமை, மற்றும் கதைப்போக்கு ஆகியவற்றில் சுந்தரராஜனின் அணுகுமுறைகளை விளக்குதல்.
- இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமாயண அகராதியின் முக்கியத்துவத்தை நிறுவுதல்.

மேற்கண்ட நான்கு நோக்கங்களைக் கொண்டதாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமைந்துள்ளது.

திறவுச் சொற்கள்

கம்பராமாயணம், அன்பில் சே. சுந்தரராஜன், கம்பராமாயண அருஞ்சொல்லகராதி, கம்பர் கவிதைக் கோவை, இலங்கைத் தமிழறிஞர்கள், சொற்பொருள் விளக்கம், இலக்கிய பங்களிப்பு, தமிழ் மொழி வளர்ச்சி, கம்பராமாயணப் பரவல், ஈழத் தமிழ் இலக்கியம்

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் கம்பராமாயணம் என்பது மிகப்பெரிய காப்பியமாகும். கம்பனின் கவிதைகள் யாவும் தமிழ்மொழியின் செழுமையையும் பெருமையினையும் உலகிற்கு எடுத்துச் செல்லும் சொற்களஞ்சியாமாகத் திகழ்கிறது. கம்பராமாயணத்தில் சொற்கள், உவமைகள், எடுத்துக்காட்டுகளெனக் காப்பியத்தின் ஒவ்வொரு கூறுகளும் பல்வேறு பரிமாணங்களில் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில், தமிழ்மொழி வளர்சிக்கு பெரும் பங்களிப்பினைச் செய்த அறிஞர்கள், கம்பராமாயணத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளும் முயற்சியில் அருஞ்சொல்லகராதி உருவாக்கத்தை முன்னெடுத்தனர். இதில் அன்பில் சே. சுந்தரராஜன் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளார். இவர் தொகுத்த ‘கம்பராமாயண அகராதி’ நூல்கள், ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வுலகில் இன்றியமையாத பணிகளுள் ஒன்றாகும். இந்த ஆய்வுக் கட்டுரையானது இலங்கையில் கம்பராமாயண அகராதிகள் உருவாக்கத்தின் வரலாறு, அவ்வகராதி உருவாக்கும் முயற்சியில் ஈடுப்பட்ட அ.சே.சுந்தரராஜனின் பங்களிப்பினை எடுத்தியம்புவதாக அமைகிறது.

அ.சே.சுந்தரராஜன் பிறப்பு

அ.சே.சுந்தரராஜன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1899ஆம் ஆண்டு திருச்சி அருகே உள்ள அன்பில் என்ற ஊரில் பிறந்தவர். திருச்சியில் உள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரியில் வரலாற்றுப் பாடத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். இவரைப் பற்றிய

மற்றைய விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இவர் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று ஆசிரியர் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆற்றிய பணிகள்

அன்பில் சே. சுந்தர்ராஜன் 1922ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இராமநாத வள்ளல் நிறுவிய பரமேஸ்வரா கல்லூரி மற்றும் இராமநாதன் கல்லூரிகளில் தமிழாசிரியராக 22 ஆண்டுகள் பணியாற்றினார். இவருடைய நூல்கள் சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் பாடமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவர் கம்பராமாயணத்திற்கு அகராதி ஒன்றை 'கம்பராமாயண அருஞ்சொல்லகராதி' (1-5) என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டார். இந்த நூல் 1978க்குப் பிறகு மறுபதிப்பு காணவில்லை. அவரது மற்ற படைப்புகளில் 'கம்பர் கவிதைக் கோவை' (1-3), 'இராமன் காதை' (சுருக்கம்), 'நளன் சரிதம்' (சுருக்கம்), 'தமிழ் அமுதம்', 'வில்லி பாரதம்' (சுருக்கம்), மற்றும் 'கம்பரும் உலகியலும்' அடங்குகின்றன.

கம்பராமாயணச் சுவையை வளர்க்கும் நோக்கத்துடன் 'கம்பர் கவிதைக் கோவை' என்ற நூலை அரிதின் முயன்று மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளார். கம்பராமாயணத்தில் உள்ள ஆறு காண்டங்களிலும் உள்ள சிறந்த செய்யுட் பகுதிகள் கதைப் போக்குக்கு இயைந்தவாறு கோர்க்கப்பட்டுள்ளமை இந்த நூலின் சிறப்பியல்பாகும். முதலாவது பாகத்தில் பாலகாண்டம் அயோத்தியா காண்டம். ஆரணிய காண்டம் என்ற மூன்று காண்டங்களில் இருந்து திரட்டிய செய்யுட்பகுதிகள் உள்ளன. இரண்டாம் மூன்றாம் பாகங்களில் கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்ற மற்றைய காண்டங்களிலிருந்து திரட்டிய செய்யுட் பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கம்பராமாயண அருஞ்சொல்லகராதி

அகராதி உருவாக்குதல் என்பது அறிஞர்கள் பலரும் கூடிச் செய்யக்கூடிய பெரும் பணியாகும். அப்பணியை மேற்கொள்ள பெரும்பொருட் செலவும் ஆகும். ஒரு பல்கலைக்கழகம் மேற்கொண்டு நிறைவேற்றுதற்குரிய இவ்வரிய பெரும் பணியினைத் தம்முடைய முதுமை காலத்தில் மேற்கொண்டு "கம்பராமாயணம் அருஞ்சொல்லகராதி" எனும் கம்பராமாயண அகராதியின் முதலாம் பாகத்தை 1967இல் வெளியிட்டுள்ளார்.

கம்பர் பாடல்களைக் கதைப்போக்குக்கு இடையறவின்றித் தொகுத்து விளக்கும் பணியினை முன்பு 'கம்பர் கவிதைக் கோவையில்' செய்த இவர்,1967-ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 9500 சொற்கள் அடங்கிய அரும்பத அகராதியாகத் தொகுத்துள்ளார். இந்நூல் 1970இல் ஏறக்குறைய 25,000 சொற்களைக்கொண்ட முழு அகராதியாக விரிவடைந்தது. இவ்வகராதியில் பத்தாயிரத்திற்கும் மேலுள்ள கம்பராமாணப் பாடல்களில் உள்ள சொற்களைத் தொகுத்து, 25000க்கும் மேற்பட்ட சொற்களுக்கு விளக்கம் கொடுத்துள்ளார். இந்நூலானது நான்கு பாகங்களைக் கொண்டது.

“கம்பர் காப்பியத்துட் பயின்றுள்ள சொற்களையெல்லாம் அகர வரிசையில் தொகுத்து நோக்கி, அச்சொற்கள் கருவியாகக் கம்பர் உணர்த்திய பொருட் கூறுகளையும் முறைப்படுத்தி, இராமகாதையாகிய பெருங்காப்பியத்திற்கெனச் சிறப்புடையதோர் அகராதியினை அமைத்தல் வேண்டும் என்னும் பெருவேட்கை, இலங்கை இராமநாதன் கல்லூரியிற் பல்லாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்து ஓய்வு பெற்ற திருவாளர் அ.சே. சுந்தரராஜ ஐயங்கார் பி. ஏ. அவர்களது புலமையுள்ளத்தில் முகிழ்த்தது. அதன் பயனாகப் புலமைச் செல்வர் திரு. அ. சே.சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள் கம்பராமாயணத்தில் அகர முதல் ஔகாரம் இறுதியாக அமைந்த சொற்றொகுதிகளைக் கொண்ட கம்பராமாயண அகராதி முதலாம் பாகத்தை அரிதின் முயன்று அமைத்து 1970-ஆம் ஆண்டில் வெளியிட்டு உதவினார்கள். அவ்வகராதி தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தமிழறிஞர்களும் பேராசரியர்களும் தமிழன்பர்களும் ஒருமித்துப் பாராட்டப்பெறும் சிறப்புடையதாக விளங்குகின்றது”. என அன்றைய அண்ணாமலைப் பல்கலைகழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் க.வெள்ளைவாரணனர் குறிப்பிடுகிறார்.

கம்பராமாயண அருஞ் சொல்லகராதியின் பாகங்கள்

- பாகம் 1 மாதிரிப் பிரதி – அகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொற்றொகுதி
- பாகம் 2 - 'க' முதல் 'ச' வரையுள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்றொகுதி
- பாகம் 3 - 'ப' முதல் 'த'வரையுள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்றொகுதி
- பாகம் 4 - 'ம' முதல் 'வ' வரையுள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்றொகுதி

மேற்கண்டவாறு நான்கு பாகங்களாக அகர வரிசையில் கம்ப ராமாயண அகராதியானது தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் சுருக்கக் குறியீட்டு விளக்கமும் இறுதியில் பிழைத் திருத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் பாடபேதங்களும் தரப்பட்டுள்ளது.

சான்றாக அணிதல் என்ற சொல்லுக்கு

“1. அலங்கரித்தல். மாகம்மணி அணிதேர். (பா: 1353)

கோநகர் அணிக. (அ : 122) அணிவுறும் அமலை. (அ : 136)

2. அழகு செய்தல். ஆறணிந்து சென்று. (பா : 13)

3. பூசுதல்.துவரணிந்தன வெனப்பொசி துதைந்தன. (கி: 191)

4. வரிசையாக்குவித்தல். அணியும் ஆணை வெண்கோடும் (பா: 18)”

இவ்வாறாக கம்பராமாயணத்தில் அணிதல் என்ற சொல் பயின்று வந்துள்ள இடங்களைச் சுட்டுவதோடு பாடல்களுடைய காண்டம் மற்றும் எண்களையும் குறிப்பிடுகிறார்.

கம்பர் கவிதைக் கோவை பற்றிய அறிஞர்களின் பார்வை

கம்பராமாயண ரசனை வெள்ளம் இலங்கையில் பெருக்கெடுத்து ஓடுவதற்குக் 'கம்பர் கவிதைக் கோவை' வெளியீடு பெருந்துணையாக விளங்கியது. இந்தக் கோவை நூல் வெளிவந்த காலத்தில் அ. சே. சுந்தரராஜன் அவர்களின் பணியை அறிஞருலகமே வியந்து பாராட்டியுள்ளது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்தக் கோவை நூலை உயர்தர மாணவர்களும் ஆசிரியர்களும் கம்பராமாயணத்தை எளிதில் கற்க உதவும் நூலாக இருக்குமென மதிப்பிட்டுள்ளார்.

“திரு.அ.சே.சுந்தரராஜன் அவர்கள் ஆழ்வார்களின் அருளிப்பாடுகளில் ஆழ்ந்தவர்கள்; கம்பரில் திளைத்தவர்கள்; கம்பராமாயண மகா சமுத்திரத்தில் ரஸஞ் சொட்டுகின்ற ஆயிரத்துக்குச் சிறிது அதிகமான பாடல்களைத் தேடிச் கவைத்து, ஒரு நல்ல ரஸகலசத்தை இலக்கிய இரசிகர்களுக்கு வழங்கியிருகின்றார்கள்.”

பேராசிரியர் ஶ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்,

“கம்பனின் மகா காவியத்தை முழுவதும் கற்றுணர்வது எளிய காரியமன்று. பலதிறப்பட்ட துணை நூல்களும் அவசியம் என்று கருதுகின்றேன் . சுருக்கங்களும் பிற திரட்டு நூல்களும் கம்பனது கவித்துவ நயத்தை உணர்வதற்குப் பெரிதும் பயன்படுவனவாம்.

காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் அவர்கள் பால காண்டத்திற்கு ஒரு சுருக்கம் இயற்றினர். பின்னர், பி.ஶ்ரீ முதலான பலரும் பல காண்டகளுக்குச் சுருக்கம் இயற்றி அளித்திருக்கிறார்கள். கம்பராமாயண இன்கவித் திரட்டு நூலும் இங்கே கூறத்தக்கதுவே, தங்கள் நூலும் மேற் குறித்தன போன்று பயன்பட வல்லதேயாகும்.”

வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்:

“திருவாளர் அ.சே.சுந்தரராஜன் பி.ஏ. என்பவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், பரமேசுவரக் கல்லூரியிலும் பல்லாண்டுகளாகத் தமிழாசிரியராய்த் தமிழ்த் தொண்டு பூண்டு மாணவர்களைத் தமிழ்ச் சுவையைத் துய்க்கச் செய்துவருபவர். மாணவர்களே யன்றித் தம்மைப் போலவே தமிழ் மக்களும் அம்மொழியைச் சுவைக்க வேணுமென்ற கருத்தினால் அன்னார் கற்றோரிதயத்தைக் களிப்புறச் செய்யும் கம்பர் கவிதைகளில் அருஞ் செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து, கம்பர் கவிதைக் கோவை என்று பெயர் சூட்டி, அவற்றின் பொருளையும் நுண்மையுற விளக்கி வெளியிடும் பணியை மேற்கொண்டுள்ளார். இவ்வெளியீடு சிறிது தமிழுணர்ந்தோரை ஆசிரியருதவியின்றியே

கற்க வழிகாட்டிக் கம்பர் கவிகளில் அவர்களைத் திளைக்கச் செய்யத் தூண்டுகோலாக இருக்குமென்று கருதுகிறேன்."

கம்பர் கவிதைக் கோவையின் முதலாம் பாகம் 1950 ஆம் ஆண்டு வெளியானது. இந்நூலக்கு சு. நடேச பிள்ளையவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். இவர் அந்நாளில் இலங்கையின் தபால் அமைச்சகத்தின் மந்திரியாக இருந்தவர். இவரின் உதவிகளோடு அ.சே.சுந்தரராஜன் கம்பர் கவிதைக் கோவையைத் தொகுத்து பதிப்பித்துள்ளார்.

கம்பராமாயணத்தில் சிறந்த பாடல்களைத் திரட்டி கதைப்போக்கிற்கேற்ப இந்நூல் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலானது இரண்டு பாகங்களாக அமைந்துள்ளது. முதல் பாகத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம் ஆகிய மூன்று காண்டகங்ளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடல்களும் அவற்றுகான எளிமையானக் குறிப்புரையுரையும் ஆசிரியர் கொடுத்துள்ளார். கம்பராமாயணக் கதைப்போக்கிற்கு ஏற்ப ஒவ்வொரு படலத்திற்கு முன் ஆரம்பக் குறிப்புடன் அப்படலத்தின் உள்ள பாடல்களின் எண்களையும் குறித்துள்ளது இந்நூலின் சிறப்பம்சமாகும். கம்பர் கவிதைக் கோவையிலிருந்து சில சான்றுகள் பின்வருமாறு

மிதிலையிற் பிராட்டியைக் கண்டமை

ஆரம்பக் குறிப்பு

"கன்னி மாடத்திலே தோழியர் நடுவிலே நின்ற சீதாபிராட்டியின் பேரழகை முனிவன் பின்னே சென்ற இராமபிரான் கண்ட நிகழ்ச்சியை விரித்துக் கூறுவன இப்பாடல்கள்.

இந்நூலில் பிராட்டியைப் பற்றி முதன் முதலாகக் கூறும் சந்தர்ப்பம் மிதிலைக் காட்சிப் படலத்திலேயே எழுகின்றது. அப்படல ஆரம்பத்திலேயே சும்பர் அவள் திருமகளே என்பதை "மையறுமலரின் நீங்கி .. வந்து செய்யவளிருந்தாள்" என்று தோற்றுவாய் செய்து அடுத்தபடி அவள் வாம்பில் போழகினாள் என்று ஒரு சொல்லால் தொகுத் துணர்த்தி, மறுபடி " ஆதரித்த முதில் கோல் தோய்த்து அவயவ மமைக்குந் தன்மை யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கும் எழுத வொண்ணாச் சீதை " என்று ஒருவாறு விளக்கி, இப் பகுதியில் அவ்வரம்பில் போழகைக் கட்டுரைத்துச் செல் கின்றார். முதலாம் பாட்டில் சீதா பிராட்டியின் மேனி யொளி, அவயவவமைப்பு, அமுத மொத்த தன்மை -இம் மூன்றும் ஒரு சேரப் பெற்றமையினால் விளையும் இன்பம் இவற்றை வகுத்துரைத்து, மேல்வரும் பாடல் களில் ஒவ்வொன்றையும் விரித்துக் கூறி, ஈற்றில் 'எண்ணரு நலத்தினாள்' என்று நிலை நாட்டுகின்றார்.

இந்த வருணனையை அடிமுதல் முடிவசையில் ஒவ் வொரு உறுப்பையும் பல திறப்பட்ட உவமைகளையிட்டுச் செய்யாமல் முழுவதையும் சமுதாயமாக வைத்துக் கூறுவது குறிப்பிடற்பாலது. சூர்ப்பநகை இராவணனிடம் பிராட்டியினழகை

விரித்துரைக்கு மிடத்தும் இச்சீரிய முறைபற்றிக் கூறுகின்றார். (தெரிவு செய்யப்பட்ட பகுதிகள், மிதிலைக் காட்சிப் படலம்: 21-27; 20-32; 34-35.)”[25]

இவ்வாறாக, பாலகாண்டத்தில் இடம்பெறும் மிதிலைக் காட்சிப் படலத்திற்கு ஆரம்பக் குறிப்பும் அப்படலத்தின்கண் எடுத்தாழப்பட்டுள்ள பாடல்களின் எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

“பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடொடு
அன்னம் மாடும் முன்றுறை கண்டங் கயல்நின்றார்.”

(கம்ப. மிதிலைக் காட்சிப் படலம், 93)

இச்செய்யுளில் உள்ள அரும்பதங்களை விளக்குவதோடு தொடர்ந்து விளக்கவுரையினையும் தருகிறார். அத்துடன் இப்பாடலில் இடம்பெற்றுள்ள சொற்பதங்கள் கம்பராமாயணத்தில் பயின்றுவரும் பிற இடங்களையும் சுட்டுகிறார்.

“போல் - அசை. கவியின்பம் - சீதா பிராட்டி; கவி யின்பம் போல்பவளாகிய சீதா பிராட்டிக்கு ஒரு பெயர் போல நின்றது. பொன்னின் சோதி, போதினின் நாற்றம் பொலிவு, தேனின் தீஞ்சுவை இவற்றையுடைய சீதா பிராட்டி. பொன்னின் சோதி - வரம்பில் பேரழகு சுடர் விட்டுப் பிரகாசிப்பதைக் குறிக்கும். உருவ நாறும் வான்சுடர்ச் சோதி வெள்ளம்' (ஆரணிய: 92) போதின் இன் நாற்றம் பொலிவு-மலரினது நறு மணம், அழகு முதலியவற்றோடு கூடிய தன்மை; உறுப்பு முதலியவற்றின் இசைவுற்ற சேர்க்கையழகைக் குறிக்கும். தென் உண் தேனின் தீம் சுவை- வண்டுகள் படிந்துண்ணும் சிறந்த தேனினது இனிய சுவை; அவ்வழகு தெவிட்டாத இன்ப உருவாய் உணர்ச்சியிற் படிதலைக் குறிக்கும். இம் மூன்றையு முடையவள். இம் மூன்று முடைமையின் சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் என்னும் மூன்றையு முடைய கவி யின்பம் போல்பவளாகிய சீதா பிராட்டி, கவி "உயிருருக்கும், புக்குணர்வுருக்கும்"; அது போலவே மேனி யொளியும் சாயலும் இன் சொல்லும் கண்ணையும் கருத்தையும் கவரும் இயல்பினள். இத்தகையவளைக் கன்னிமாடத்தின் மேலிடத் துள்ள முற்பக்கத்திலே சுண்டு அதற்கு மேலே செல்ல மாட்டாது, அவ்விடத்தருகே நின்றார். அன்பிலே மிகுந்த பெண் அன்னங்களோடு ஆண் அன்னங்கள் விளையாடா நின்ற முன்துறை. இச் செய்யுளில் சீதா பிராட்டியினது 'மதனற்கும் எழுத வொண்ணா வரம்பில் பேரழகு வகுத்துக் கூறப்பட்டது. மேல்வருஞ் செய்யுள்கள் ஒவ்வோராற்றான் விரித்துக்கூறும்.”

இவ்வகையில் கம்பன் கவிச்சுவையை நுகர விரும்பும் தமிழர்களுக்கும். மாணவர்களுக்கும் ஏறத்தாழ சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் பெருவிருந்தாக இந்தத் தொகுதி அமையலாயிற்று. இந்த அரிய நூலை அரிதின் முயன்று தொகுத்த அ. சே.

சுந்தரராஜனின் பணிகள் பல்வேறு வகையில் கம்பராமாயண ரசனையைப் பெருக்கும் கலைக் களஞ்சியமாக அமைந்தமையை பலர் இப்பொழுது நினைவு கூருவதில்லை. கவிச்சக்கரவர்த்தி கம்பனின் சொல்லோவியங்களில் பத்தில் ஒரு வீதம்தான் இந்தத் தொகையில் அடங்கியுள்ளது. ஆயினும் ஒவ்வொரு பாடலுக்கும் பதின்மடங்கு பொலிவு காணும் வகையில் பதிப்பாசிரியரின் உரைவிளக்கம், கம்பன் கவிதைத் திறன்களையெல்லாம் கொணர்ந்துள்ளது.

கம்பராமாயணத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும் நிகரான சுவையுடையவை. தாம் சுவையெனக் கண்ட பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பிழையறப் பரிசோதித்து சுவைகுன்றாது காவிய ரசனைக்கு வழி செய்துள்ள அ. சே. சுந்தரராஜன் சுருங்கிய நேரத்தில் விரிந்த காவியத்தின் பெரும்பயனை அனுபவிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார். வெறுமனே கதைத் தொடர்புகளை மட்டும் காட்டாது கதையோடு விமர்சன முறைகளையும் கலந்து சுவை பயக்கவைத்துள்ளமை இந்தத் தொகுதியின் பெரும் சிறப்பாகும். இதனை அறிஞருலகமே விதந்து பாராட்டியுள்ளது.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் விசலமான காவியம் முழுதையும் பயில இயலாதவர்களுக்குக் கம்பர் கவிதைக் கோவை பயன்நிறைந்த கைந் நூலாகத் திகழும் என்பது பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் கருத்து. 'கம்பர் கவிதைக் கோவை' சீர் பதங்கள் பிரித்துச் செவ்வனே பதிக்கப்பட்ட நூலாகும். சுருங்கக் கூறின் தமிழுணர்ந்தோர் அனைவரையும் ஆசிரியர் உதவியின்றிக் கம்பரின் கவிச்சுவைகளில் திளைக்கச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

இராம காதை – கம்பராமாயண கதைச் சுருக்கம்

அ.சே.சுந்தரராஜன் 1953இல் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது ‘இராம காதை’ என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூல் கம்பராமாயணத்தினை முழுமையாக கூறும் கதைச் சுருக்கமாக அமைந்துள்ளது. இந்த இராம காதையைப் பற்றி சு. நடேசப்பிள்ளையவர்கள் ‘கம்பராமாயணத்தின் சாரமாகக் ‘கம்பர் கவிதைக் கோவை’ என்ற நூலைத் தொகுத்து வெளியிட்ட திரு. அ. சே. சுந்தரராஜன் அவர்கள் இராம காதை என்ற இவ்வுரைநடை நூலை இயற்றியுள்ளார்.

இந்நூல் கம்பராமாயணக் கதைப் போக்கைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. கம்ப ராமாயணத்தைக் கற்பதற்கு இது முதற்படியாக அமைந்துள்ளது என்று கூறலாம். கம்பர் ஆண்ட செஞ்சொற்கள் பல இந்நூலிற் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்நூலின் நடை மாணவர் பயில்வதற்கு ஏற்றதாகும்.

இந்த அரிய தொகுப்பு நூல், கம்பன் கவித்திறன் பற்றி எத்தனை நூல்கள் வெளிவந்தாலும் அவற்றிற்கெல்லாம் மகுடமாக இருக்கக்கூடிய சிறப்பு வாய்ந்தது. கம்பராமாயணத்தின் முழுமையையும் ஆழத்தையும் உணர விரும்புபவர்கள் அ. சே. சுந்தரராஜனின் கம்பர் கவிதைக் கோவையைத் தவறவிடக் கூடாது. கதைத் தொடர்ச்சி

இடையறாத வகையில் கம்பராமாயணம் முழுமையும் ஒரே கோர்வையாக்கித் திரட்டிய அ. சே. சுந்தரராஜன் ஆற்றிய இலக்கியப் பணி அளப்பறியது.

இவ்வாறாக கம்பராமாயண ரசனையில் தோய்ந்தும் அதைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் வாழ்ந்த ஒரு நெடிய பரம்பரையினர் ஈழத்தில் இருந்துள்ளனர். பல அறிஞரும் புகழ்ந்துரைக்கும் கம்பரின் உள்ளத்தை நன்குணர்ந்து அவன் சிறப்பைப் பலமேடைகளிலும் எடுத்து முழங்கியுள்ளனர். இவர்களுள் கம்பராமாயணத்திற்கு உரையாசிரியராக பதிப்பாசிரியராக விளங்கி ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் புகழ் பெற்றுயர்ந்தவர்களின் பணிகள் குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

இலங்கையில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பங்களித்த பல அறிஞர்களுள், அன்பில் சே. சுந்தரராஜன் அவர்களின் பணி, கம்பரின் காவியத்தை நுண்ணறிவுடன் அணுகும் வழியை உருவாக்கியது. இது தமிழ் மொழியின் வரலாற்றில் மறக்க முடியாத பங்களிப்பாகும். இலங்கையில் கம்பராமாயண அகராதி உருவாக்கம் என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

அன்பில் சே. சுந்தரராஜன் போன்ற அறிஞர்கள், கம்பரின் காவியத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளும் முயற்சியில் அருஞ்சொல்லகராதி உருவாக்கியதன் மூலம், தமிழ் மொழியின் சொற்பிறழ்வுகள், உவமைகள் ஆகியவை தெளிவாக விளக்கப்பட்டன. இந்த முயற்சி, இலங்கைத் தமிழறிஞர்களுக்குப் பயிற்சி, ஆராய்ச்சி, மற்றும் கம்பரின் இலக்கிய ஆழத்தை உணர்வதற்கான வழிகாட்டியாக அமைந்தது. 1978க்கு பிறகு மறுபதிப்பு காணப்படாத இந்த அருஞ்சொல்லகராதி, இன்று மீண்டும் வெளிவர வேண்டிய ஒரு இலக்கியச் செல்வமாகும்.

கம்பரின் காவியம் உலக இலக்கியங்களோடு ஒப்பிடத்தக்கது என்பதை வ.வே.சு. ஐயர் போன்றோர் தங்கள் திறனாய்வுகளில் நிறுவியுள்ளார்கள். இவ்வாய்வின் மூலம், தமிழ் மொழியின் செழுமை, கம்பனின் கவித்துவம், மற்றும் இலங்கைத் தமிழறிஞர்களின் பங்களிப்பு ஆகியவை ஒருங்கிணைந்து ஒரு இலக்கியச் சிந்தனையை உருவாக்குகின்றன. இவ்வாறு, இலங்கையில் கம்பராமாயண அகராதி உருவாக்கம் என்பது தமிழ் மொழியின் பெருமையை வெளிக்காட்டும் ஒரு அரிய முயற்சி என்பதை இந்த ஆய்வுரை உறுதியாக நிறுவுகிறது.

துறைநின்ற நூல்கள்

1. சுந்ததரராஜன், அ.சே.,(1950) - கம்பர் கவிதைக் கோவை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பவர் பிரஸ், கும்பகோணம்
2. சுந்தரராஜன்,அ.சே.,(1967) - கம்பராமாயண அருஞ்சொல்லகராதி, முதல் பாகம்-அ, கம்பர் வெளியீடு, சிதம்பரம்

3. சுந்தரராஜன்,அ.சே.,(1978) - ஸ்ரீமத் கம்பராமாயண அருஞ்சொல் அகராதி நான்காம் பாகம் ம – வ ,
4. சுந்தரராஜன்,அ.சே.,(1983) – இராம காதை (கம்பராமாயணக் கதைச் சுருக்கம்), ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. பிரசாந்தன், ஸ்ரீ., (2006) ஈழத்தில் கம்பன், அகில இலங்கைக் கம்பன் கழக வெளியீடு, கொழும்பு 13.